**MCOP NO:2689/2024** **DATE: 22.08.2025**

ம.சா :1

பெயர் : திரு. புவன் G நீலகண்டன்

த/பெ : திரு. கோபால் நீலகண்டன்

வயது : 21

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:</u>**

**<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:**

விபத்து சமயத்தில் நான் இருசக்கர வாகனம் ஓட்டிக்கொண்டு சென்றேன். மசாஆ 2-ல் விபத்தானது Skid and Fall என்ற குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தானது மியூசிக் அகாடமி மேம்பாலத்திலிருந்து கீழே இறங்கும்போது விபத்து ஏற்பட்டது. அந்த சாலையானது ஓரளவிற்கு தான் இருக்கும். மேற்படி சாலையானது குண்டு, குழியுமாக இருந்ததால் அதை சமாளித்து நான் வாகனத்தை ஓட்டிச்செல்லும்போது நான் நிலை தடுமாறி கீழே விழுந்து விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. சாலையில் நானே நிலை தடுமாறி கீழே விழுந்து விட்டதால் தான் எனக்கு விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. TN 20 AP 6880 என்ற வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. என்னை காப்பீட்டு நிறுவனத்திலிருந்து வந்து விபத்து சம்பந்தமாக என்னை கேட்டார்கள். விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனமானது எனக்கு பின்னால் வந்தது. எனக்கு முன்னால் சென்ற வாகனம் காராகும். எனக்கு முன்னால் சென்ற காரானது எந்த வித சமிக்கையில் இல்லாமல் என் வழியில் வந்தது என்றும், அதனால் நான் பிரேக் போட்டதால் நான் நிலை தடுமாறி கீழே விழுந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் பிரேக் போட்டு நிறுத்திய உடன் லாரியானது என் வானத்தின் பின் பகுதியில் மோதியது. எனக்கு முன்னால் சென்ற காரின் மீதும் தவறு உள்ளது என்று சொன்னால் சரிதான். அதற்காக அந்த காரின் உரிமையாளர் மீதோ, ஓட்டுநர் மீதோ நான் வழக்கு ஏதும் தாக்கல் செய்யவில்லை. மேற்படி காரின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டு நிறுவனத்தை தரப்பினராக மனுவில் சேர்க்கவில்லை. மேற்படி காரின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டு நிறுவனம் இந்த மனுவிற்கு அவசியமான தரப்பினர் என்றும், அவர்களை தரப்பினர்களா சேர்க்காததால் அது Non joinder of necessary parties என்பதால் மனு தள்ளுபடி செய்யபட வேண்டும் என்றால் சரியல்ல. வருமானம் மற்றும் வருமான இழப்பை காட்டும் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான்

பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகையை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. 2-ம் எதிர்மனுதாரரை பொறுத்து இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.